# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் – திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்

1. திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்பு எது?

மாநில அளவில் தொழில் வணிகத்துறை ஆணையரகமும், சென்னை மாவட்டத்திற்கு மண்டல இணை இயக்குநர் சென்னை அவர்களும் மற்றும் இதர மாவட்டங்களுக்கு பொது மேலாளர்கள் மாவட்ட தொழில் மையமும் செயல்படுத்தும் நிறுவனங்கள் ஆகும்.

2. திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுதற்கான தகுதிகள் யாவை?

விண்ணப்பதாரர்கள் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகங்கள் / தேசிய திறன் மேம்பாட்டு முகவர்கள் மற்றும் அதைப்போன்ற நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தேவையான கல்வி தகுதி மற்றும் வயது வரம்பை பூர்த்தி செய்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் கடந்த மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக தமிழ் நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பொறியியல்,பட்டம் அல்லது பட்டயம் அல்லது தொழில் பயிற்சி நிறுவனத்தில் படித்த 18–45 வயதிற்குட்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

3. திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நிதி எவ்வாறு பெறப்படுகிறது?

திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முழு நிதியும் தமிழ்நாடு மாநில அரசால் தமிழ்நாடு திறான் மேம்பாட்டுக் கழகம் மூலமாக வழங்கப்படுகிறது.

4. இத்திட்டத்தின் கீழ் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு யாது?

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் திறன் பயிற்சி சான்றிதழ்களுடன் கூடிய வேலைவாய்ப்பினை வழங்கும். குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பயிற்சி அளிப்பதற்குத் தேவையான தகுதிகள் பயிற்சியாளர்களுக்கு இருத்தலை உறுதி செய்ய வேண்டும்.

5. பயிற்சியின் போது வழங்கப்படும் உதவித்தொகை எவ்வளவு?

இத்திட்டத்தின்படி குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தேவையான திறன் பயிற்சியினை தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு 6 மாத காலத்திற்கு வழங்கும் இக்காலத்தில் குறைந்தபட்ச ஊதியமாக மாதத்திற்கு ரூ.5000/- வீதம் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களால் பயிற்சி பெறுபவர்களுக்கு வழங்கப்படும். அத்தொழில் பயிற்சி காலத்திற்கு அரசு மாதாந்திரமாக ரூ.2000/- வீதம் 6 மாத காலத்திற்கு பயிற்சி ஊக்கத்தொகையை அளிக்கும்.

6. தமிழ்நாட்டுக்கு வெளியே வசிப்பவர் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற விண்ணப்பிக்க இயலுமா?

இயலாது. விண்ணப்பதாரர் கடந்த மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக தமிழ் நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.